இங்கிலாந்தில் உறுப்பு தானம் குறித்த சட்டத்தில் வரவிருக்கும் மாற்றங்கள் குறித்த பொதுவான கேள்விகளுக்கு இந்தப் பக்கம் பதில்களை வழங்குகிறது.

## 10 முக்கிய கேள்விகள்

நீங்கள் சட்ட மாற்றங்கள் குறித்து எவரிடமாவது பேச விரும்பினால், தயவுசெய்து எங்கள் சிறப்பு இணைப்பை அழையுங்கள்**: 0300 303 2094.** இந்தச் சேவை ஆங்கிலத்தில் மட்டுமே கிடைக்கிறது என்பதை நினைவிற்கொள்க**.**

## மாற்றப்படுவது என்ன?

இங்கிலாந்தில் உறுப்பு தானம் தொடர்பான சட்டம் மாற்றப்படுகிறது. அதாவது 2020 வசந்த காலத்திலிருந்து, இங்கிலாந்தில் உள்ள எல்லா வயதுவந்தோரும் அவர்கள் இறக்கும் போது ஒரு உறுப்பு கொடையாளராக கருதப்படுவார்கள், கொடையளிக்கக்கூடாது என பதிவு செய்தவர்கள் அல்லது விலக்களிக்கப்பட்ட குழுக்களில் ஒன்றில் இடம்பெற்றவர்கள் தவிர்த்து.

இது பொதுவாக ‘விலகல்’ அமைப்பு என குறிப்பிடப்படுகிறது.

நீங்கள் உறுப்பு கொடையாளர் பதிவேட்டில் சேர அல்லது விலகுவதற்கான உங்கள் முடிவை பதிவு செய்யலாம்.

விலக்களிக்கப்பட்டவர்கள் பின்வருமாறு:

- 18 வயதிற்குட்பட்டவர்கள்
- இங்கிலாந்தில் 12 மாதங்களுக்கும் குறைவாக வாழ்ந்தவர்கள் அல்லது தானாக முன்வந்து இங்கு வசிக்காதவர்கள்
- இந்த மாற்றத்தைப் புரிந்து கொள்ளும் திறன் இல்லாதவர்கள்.

இந்த மாற்றத்திற்கு உட்பட்ட வயதுவந்தோர், இன்னமும் அவர்கள் ஒரு உறுப்பு தானம் செய்ய விரும்புகிறார்களா இல்லையா, மற்றும் எந்த உறுப்புகளை தானம் செய்ய விரும்புகிறார்கள் என்பதை தேர்வு செய்யலாம், மேலும் உறுப்பு தானம் செய்வதற்கு முன் அவரது குடும்பத்தினரும் ஆலோசிக்கப்படுவார்கள்.

## இந்த மாற்றத்திலிருந்து விலக்களிக்கப்பட்ட குழுக்கள் எவை?

- 18 வயதிற்குட்பட்டவர்கள்
- புதிய ஏற்பாடுகளைப் புரிந்துகொள்வதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் போதிய மன வலிமை இல்லாதவர்கள்
- இங்கிலாந்துக்கு வருகை தருபவர்கள், மற்றும் இங்கு தானாக முன்வந்து வசிக்காதவர்கள்
- இங்கிலாந்தில் இறப்பதற்கு 12 மாதங்களுக்கும் குறைவான காலம் வாழ்ந்தவர்கள்

## நமக்கு விலகல் அமைப்பு தேவை ஏன்?

உறுப்பு தானத்தில் மிகப்பெரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது, ஆனால் இன்னும் கொடையாளர்களுக்கு பற்றாக்குறை உள்ளது. ஒவ்வொரு ஆண்டும், UK-இல் உறுப்புமாற்று காத்திருப்பு பட்டியலில் நூற்றுக்கணக்கான மக்கள் இறக்கின்றனர்.

நமது முன்னேற்றத்தைத் தொடர, பொதுமக்களின் அணுகுமுறைகளில் ஒரு மாற்றம் தேவைப்படுகிறது. 10-இல் 6-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் உறுப்பு தானத்திற்கு ஒப்புக்கொள்கிறார்கள், ஆனால் நோயாளிகளின் தேவைகளைப் நிறைவுசெய்ய குறைந்தது 10-இல் 8 குடும்பங்கள் கொடையளிக்க ஆதரவளிக்க வேண்டும் மற்றும் வாழ்வைக் காப்பாற்றவும் மேம்படுத்தவும் ஒப்புக்கொள்ள வேண்டும்.

அண்மைய வேல்ஸ் ஆய்வு முடிவுகள், அவர்கள் 2015 ஆம் ஆண்டில் விலகல் முறையை அறிமுகப்படுத்தியதிலிருந்து ஒப்புகை விகிதங்கள் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளதாகக் கூறுகின்றன. இங்கிலாந்திலும் இதே முன்னேற்றத்தைக் காண நாம் ஆர்வமாக உள்ளோம்.

## விலகல் அமைப்பு தொடங்குவது எப்போது?

2020 ஆம் ஆண்டு வசந்த காலத்தில் ‘விலகல் முறை’ நடைமுறைக்கு வரும். புதிய முறை செயல்படுத்துவதற்கான சரியான தேதி இன்னும் அரசினால் உறுதிப்படுத்தப்படவில்லை.

இங்கிலாந்தில் உறுப்பு தானம் தொடர்பான சட்டத்தை மாற்றுவதற்கான சட்டமாக்கல் பாராளுமன்ற செயல்முறை மூலம் நிறைவேற்றப்பட்டு அரச ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மாற்றங்கள் என்னவென்று மக்களுக்குத் தெரிவிக்க அதிகப்படியான நேரம் இருப்பதை உறுதிசெய்யவதற்காக மாற்றங்கள் உடனடியாக நடைமுறைக்கு வராது. இது மக்களுக்கு அவர்கள் உறுப்பு கொடையாளராக விரும்பினால் அதைத் தேர்வு செய்யவும், அந்த முடிவினை அவர்களது குடும்பத்தினருடனும் நண்பர்களுடனும் பகிர்ந்து கொள்ளவும் போதிய நேரம் கொடுக்கும்.

## நான் விலகவில்லை என்றால் எனது உறுப்புகளை தானாகவே எடுத்துக்கொள்வீர்களா?

இல்லை. உறுப்பு தானம் குறைந்த எண்ணிக்கையிலான நிகழ்வுகளில் மட்டுமே நடைபெற இயலும். UK-இல் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 500,000 பேர் இறக்கின்றனர், ஆனால் அவர்களில் 100-ல் 1 நபர் மட்டுமே தங்கள் உறுப்புகளை தானம் செய்யக்கூடிய சூழ்நிலைகளில் இறக்கின்றனர். ஒருவர் இறந்தபின்னர் மிகவிரைவாக மட்டுமே உறுப்புகளை மாற்றம் செய்ய முடியும், மேலும் அவை பயன்படுத்தக்கூடிய நிலையில் இருக்க வேண்டும், எனவே கொடையாளர்கள் பொதுவாக மருத்துவமனை தீவிர சிகிச்சை பிரிவு அல்லது விபத்து மற்றும் அவசரகால துறையில் இறந்தவர்களாக மட்டுமே இருக்க முடியும். இந்த தடங்கல்கள் காரணமாக, ஒவ்வொரு கொடையாளரும் மதிப்பற்றவர்கள்.

உறுப்புதானம் நடைபெறுவதற்கு முன்பு உங்கள் குடும்பத்தினர் அணுகப்படுவார்கள். உறுப்பு தான செயல்முறை பற்றி உங்கள் குடும்பத்தினருக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால், அத்துடன் உங்கள் நம்பிக்கை, மதம் அல்லது கலாச்சாரம் எப்படி மதிக்கப்படும் என்பது உள்ளிட்ட கேள்விகள் பதிலளிக்கப்படும். நீங்கள் ஒரு கொடையாளராக விரும்புகிறீர்களா என்பதை தேர்ந்தெடுத்து உங்கள் குடும்பத்தினருக்கு தெரியப்படுத்துவது மிகவும் முக்கியம். **உங்கள் முடிவை உங்கள் குடும்பத்தினருடன் கலந்துரையாடுங்கள்**, இதன் மூலம் **உங்கள் விருப்பம்** மதிக்கப்படுவதை உறுதிப்படுத்த அவர்கள் உதவ முடியும்.

## என் உடலுக்கு என்ன நடைபெறும் என்பதின் மீதான கட்டுப்பாட்டை நான் இழக்கிறேனா?

இல்லை. நீங்கள் ஒரு உறுப்பு கொடையாளராக விரும்பினால் அதை தேர்வு செய்யும் விருப்பம் இன்னும் உங்களிடமே இருக்கும். நீங்கள் கொடையளிக்க விரும்பவில்லை என்றால், உங்கள் முடிவை **NHS உறுப்பு கொடையாளர் பதிவேட்டில்** பதிவு செய்வது மிகவும் விரைவானது மற்றும் எளிமையானது. இதைச் செய்வதற்கான விரைவான மற்றும் எளிதான வழி இணையத்தில் செய்வதாகும். உங்களிடம் இணைய அணுகல் இல்லையென்றால், நீங்கள் எங்கள் தொடர்பு மையத்தை 0300 123 23 23 என்ற எண்ணிலும் அழைக்கலாம்.

நீங்கள் உங்கள் விருப்பங்களை NHS உறுப்பு கொடையாளர் பதிவேட்டில் எந்த நேரத்திலும் விரைவாகவும் எளிதாகவும் புதுப்பிக்கலாம். நாங்கள் அனுமதியின்றி மக்களின் உறுப்புகளை எடுக்க மாட்டோம்.

கொடையளிப்பதற்கு முன்பு உங்கள் குடும்பத்தினர் எப்போதும் ஆலோசிக்கப்படுவார்கள். உறுப்பு தான செயல்முறை பற்றி உங்கள் குடும்பத்தினருக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால், அத்துடன் உங்கள் நம்பிக்கை, மதம் அல்லது கலாச்சாரம் எப்படி மதிக்கப்படும் என்பது உள்ளிட்ட கேள்விகள் பதிலளிக்கப்படும். உங்கள் விருப்பத்தை உங்கள் குடும்பத்தினரும் நண்பர்களும் அறிந்திருப்பது முக்கியம். இது உங்கள் விருப்பத்தை, அந்த விருப்பம் எதுவாக இருந்தாலும், அவர்கள் மதிப்பதை எளிதாக்குகிறது.

## நீங்கள் எனது குடும்பத்தின் அனுமதியை இன்னமும் கேட்பீர்களா?

ஆம். உறுப்பு தானம் குறித்து குடும்பத்தினர் தொடர்ந்து ஆலோசிக்கப்படுவார்கள். இதற்கு பல காரணங்கள் உள்ளன:

- தங்களுக்கு நெருக்கமான ஒருவரின் இழப்பை எதிர்கொள்ளும் குடும்பத்தினரைக் கருத்தில் கொள்வது;
- NHS **உறுப்பு கொடையாளர் பதிவேட்டில்** பதிவுசெய்யப்பட்ட எந்தவொரு முடிவையும் விட, கொடையளிப்பது குறித்தான அவரின் அண்மை முடிவைப் பற்றி முக்கியமான தகவல்கள் குடும்பத்தினரிடம் இருக்கலாம்;
- குடும்ப ஆதரவானது, அவர்களது உறவினர் பற்றிய முக்கியமான தகவல்களை உறுதிப்படுத்த உதவுகிறது, அதாவது அவரின் மருத்துவம், பயணம் மற்றும் சமூக வரலாறு போன்ற தகவல்கள் எங்கள் உறுப்பு தான சிறப்பு செவிலியர்களுக்கு கிடைக்கின்றன. உறுப்பு தானம் செய்வதற்கு முன்னர் குடும்பங்கள் வழங்கும் தகவல்கள், மருத்துவ குறிப்புகள் மற்றும் பிற சோதனைகள் ஆகியன, அந்த நபரின் உறுப்புகளை வேறொருவருக்கு பொருத்துவது பாதுகாப்பானதா என்பதைப் புரிந்துகொள்வதற்கு மிக முக்கியம்.

உறுப்பு அல்லது திசு தானம் சாத்தியமானால் உங்கள் குடும்பம் எப்போதும் அணுகப்படும். கொடை குறித்து நீங்கள் ஏற்கனவே ஒரு முடிவை எடுத்திருந்தால், இதை உங்கள் குடும்பத்தினருடன் பகிர்ந்து கொண்டிருந்தால், அவர்கள் உங்கள் முடிவை ஆதரிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நீங்கள் முடிவை எந்த வகையிலும் பதிவு செய்யவில்லை மற்றும் நீங்கள் விலக்களிக்கப்பட்ட குழுவில் இல்லை என்றால், உங்கள் குடும்பத்தை அணுகி, உங்கள் உறுப்பு தானம் குறித்த முடிவைப் பற்றி அவர்களிடம் ஏதேனும் தகவல் இருக்கிறதா என்று கேட்கப்படும். எந்த தகவலும் கிடைக்கவில்லை என்றால், உங்கள் உறுப்புகளை தானம் செய்ய நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்கள் என்று கருதப்படும், மேலும் உங்கள் குடும்பத்தினர் இதை ஆதரிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

18 வயதிற்கு உட்பட்டவர்கள் மற்றும் மன திறன் இல்லாதவர்கள் புதிய சட்டத்திலிருந்து விலக்கப்பட்டுள்ளனர், ஆனால் இன்னும் NHS உறுப்பு கொடையாளர் பதிவேட்டில் முடிவை பதிவு செய்யலாம். இந்தத் தகவல் ஆலோசனையின் போது குடும்பத்திற்கு கிடைக்கச் செய்யப்படும். விலக்கப்பட்ட குழுக்களில் உள்ளவர்களின் உறுப்பு தான இறுதி முடிவு குடும்பத்தினரால் எடுக்கப்படுகிறது, ஆனால் பதிவுசெய்யப்பட்ட முடிவை கருத்தில் கொள்ள அவர்கள் சிறப்பு செவிலியரால் ஊக்குவிக்கப்படுவார்கள்.

## இந்த மாற்றங்கள் என் குழந்தைகளைப் பாதிக்குமா?

விலகல் முறை 18 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு பொருந்தாது. 18 வயதிற்குட்பட்ட ஒருவருக்கு கொடையளிக்க வேண்டிய முடிவு எடுக்கும் சூழ்நிலைகளில், அந்த முடிவை எடுத்து ஒப்புதல் அளிக்கும்படி குடும்பத்தினரிடம் கேட்கப்படும்.

NHS **உறுப்பு கொடையாளர் பதிவேடு** வயது வேறுபாடின்றி அனைவருக்குமானது. ஒரு குழந்தை **தனது முடிவை பதிவு செய்ய விரும்பினால்**, அல்லது ஒரு குழந்தையின் பெற்றோர் குழந்தைக்காக அதைச் செய்ய விரும்பினால், அதற்கான விருப்பம் கிடைக்கிறது. NHS உறுப்பு கொடை பதிவேட்டில் பதிவு செய்யப்பட்ட தகவல்கள், சிறப்பு செவிலியர்களால் அணுகக்கூடியவை, அவர்கள் உறுப்பு தானத்திற்கான சாத்தியக்கூறு குறித்து அக்குடும்பத்தை அணுகுகிறார்கள்.

## எனது இறுதி சடங்கு திட்டங்கள் பாதிக்கப்படுமா?

இறுதிச் சடங்குகள் தொடர்பாக ஒருவரின் எண்ணங்கள், மதநம்பிக்கைகள் அல்லது கலாச்சாரத்தைச் பற்றிய கருத்துகள் உள்ளனவா என்பதைப் பார்க்க, எங்கள் சிறப்பு செவிலியர்கள் எப்போதும் குடும்பத்துடன் பேசுகிறார்கள். எடுத்துக்காட்டாக, விரைவான அடக்கம் அல்லது சவப்பெட்டி திறப்பு.

ஒரு கொடையாளரின் உறுப்புகளை அகற்றுவதற்காக மேற்கொள்ளப்படும் அறுவை சிகிச்சைகள், மிகவும் திறமையான வல்லுநர்களால், ஒரு நோயாளியின் உயிரைக் காப்பாற்றுவதற்கான அவர்கள் செய்யும் அதே கவனிப்பு, உற்றுநோக்கல் மற்றும் மரியாதையுடன் மேற்கொள்ளப்படுகிறது. அறுவைசிகிச்சைக்குப் பிறகு அறுவைசிகிச்சை கீறல்கள் கவனமாக தைக்கப்படுகின்றன, உடலைக் கழுவுதல் மற்றும் உடை அணிவித்தல் போன்ற எந்தவொரு இறுதிச் சடங்கு விருப்பங்களும் மதிக்கப்படுகின்றன.

பல கொடையாளர்கள் சவப்பெட்டி திறப்பு வகை இறுதி சடங்கை நடத்துகிறார்கள்.

## நான் எதுவும் செய்யாவிட்டால் என்ன ஆகும்?

புதிய முறை இங்கிலாந்தில் நடைமுறைக்கு வந்தவுடன், கொடையளிப்பதிலிருந்து விலகுவதற்கான உங்கள் முடிவை தெரியப்படுத்தவில்லை மற்றும் விலக்களிக்கப்பட்ட குழுவில் நீங்கள் இல்லையெனில், உங்கள் உறுப்புகளை தானம் செய்ய நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்கள் என்றே கருதப்படும். எனவே நீங்கள் உறுப்பு தானம் செய்ய விரும்புகிறீர்கள் என்று பதிவு செய்யாவிட்டாலும் கூட, நீங்கள் விரும்புவதை உங்கள் குடும்பத்தினருக்கு தெரியப்படுத்துவது முக்கியமாகும்.

நீங்கள் எந்த உறுப்புகளை கொடையளிக்க அல்லது அளிக்காமல் இருக்க விரும்புகிறீர்கள் என்பது குறித்த குறிப்பிட்ட வழிகாட்டுதல்கள் இருந்தால், இந்தத் தகவல்களை உங்கள் கொடை முடிவை NHS உறுப்பு கொடையாளர் பதிவேட்டில் பதிவு செய்யும்போது வழங்க வேண்டும்.

கொடை சாத்தியமான சூழ்நிலையில் நீங்கள் இறந்தால், உங்கள் உறுப்புகளில் சிலவற்றை அல்லது அனைத்தையும் கொடையளிக்க வேண்டுமா என்று உங்கள் குடும்பத்தினரிடம் எப்போதும் கேட்கப்படும். அவர்களின் ஒப்புதலின்றி உங்கள் உறுப்புகள் தானம் செய்யப்படாது.

நீங்கள் NHS உறுப்பு கொடையாளர் பதிவேட்டில் உங்கள் உறுப்புகளை தானம் செய்வதற்கான முடிவை ஏற்கனவே பதிவுசெய்திருந்து, அதுபற்றி உங்கள் குடும்பத்தினரிடம் இதுவரை சொல்லவில்லை எனில், தயவுசெய்து அவர்களுக்கு தெரியப்படுத்துங்கள்.

உறுப்பு கொடையாளர் பதிவேட்டில் விலகல் முடிவை நீங்கள் பதிவு செய்திருந்தால், நீங்கள் முடிவுசெய்ததை உங்கள் குடும்பத்தினருக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

உங்கள் முடிவைப் புதுப்பிக்க அல்லது மீண்டும் உறுதிப்படுத்த விரும்பினால், **உங்கள் விவரங்களைத் திருத்துங்கள்** அல்லது 0300 123 23 23 ஐ அழையுங்கள்.

## நான் எனது முடிவை மாற்ற முடியுமா?

ஆம். நீங்கள் NHS உறுப்பு கொடையாளர் பதிவேட்டில் உறுப்பு தானம் முடிவை பதிவுசெய்திருந்து, உங்கள் விவரங்களை புதுப்பிக்க விரும்பினால், அல்லது உங்கள் முடிவை மாற்ற அல்லது மீண்டும் உறுதிப்படுத்தவோ விரும்பினால், **உங்கள் விவரங்களை திருத்துங்கள்** அல்லது 0300 123 23 23 ஐ அழையுங்கள்.

ஒரு உறுப்பு கொடையாளராவதற்கான உங்கள் முடிவை உங்கள் குடும்பத்துடன் பகிர்ந்து கொள்வது முக்கியம். இது நீங்கள் கொடையளிக்க விரும்பினீர்கள் என்பதை அவர்கள் அறிந்திருப்பதற்கும், உங்கள் முடிவை மதிப்பதை அவர்களுக்கு எளிதாக்குவதற்கும், அவர்களுக்கு அதிக நம்பிக்கையைத் தரும்.

## NHS உறுப்பு கொடையாளர் பதிவேடு என்றால் என்ன?

NHS உறுப்பு கொடையாளர் பதிவேடு என்பது, உறுப்பு தானம் குறித்து ஒரு முடிவை பதிவு செய்தவர்கள், அவர்கள் கொடையளிக்க விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், அவர்கள் அனைவரின் விவரங்களையும் வைத்திருக்கும் ஒரு தரவுத்தளமாகும். NHS உறுப்பு கொடையாளர் பதிவேட்டில் பதிவுசெய்வது மற்றும் உங்கள் குடும்பத்தினரிடம் சொல்வது ஆகியன நீங்கள் இறக்கும்போது உங்கள் முடிவிற்கு மதிப்பளிக்கப்படுவதை உறுதிசெய்ய சிறந்த வழிமுறைகள் ஆகும்.